

# தொண்டர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார் அமைச்சர் டி.ஜெயக்குமார்

## செம்மலை கருத்து பற்றி பன்னீர்செல்வம் விளக்க வேண்டும் என வலியுறுத்தல்

சென்னை, ஏப். 29–

தொண்டர்களிடம் கோரிக்கை மனுக்களை அமைச்சர் டி.ஜெயக்குமார் பெற்றுக்கொண்டார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அண்ணா தி.மு.க. தலைமை கழகத்தில் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், பா. பென்ஜமின், சேவூர் எஸ். ராமச்சந்திரன், அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர் ஆர். கமலக்கண்ணன், மாணவர் அணிச் செயலாளர் எஸ்.ஆர். விஜயகுமார் எம்.பி., அமைப்புச் செயலாளர்கள் எஸ். கோகுல இந்திரா, வி. சோமசுந்தரம் உள்ளிட்டோர் தொண்டர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் டி.ஜெயக்குமார் பேசுகையில்,

ஒவ்வொரு நாளும் தலைமைக் கழகத்தில் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் தொண்டர்களிடமிருந்து மனுக்களை பெற்று வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அண்ணா.தி.மு.க. இரு அணிகளும் இணையக்கூடாது என்று செம்மலை சொல்லும் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தா? இல்லையா? என்பதை ஓ.பன்னீர்செல்வம்தான் விளக்க வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை இரு அணிகளும் இணைய பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

ஜெயலலிதா ஆசியால் அண்ணா. தி.மு.க. ஆட்சி 4 ஆண்டு மட்டுமல்ல, அதற்கு மேலும் தொடரும். மக்கள் இந்த ஆட்சியைத்தான் விரும்புகிறார்கள்

இவ்வாறு அவர் கூறினார்.

# 2019 பார்லிமெண்ட் தேர்தலைக் குறிவைத்து 95 நாள் நாடு தழுவிய பயணம் பாரதீய ஜனதா தலைவர் அமித்ஷா துவக்கினார்

## அடி மட்டத்தில் கட்சியை வேரூன்ற வைக்கும் முயற்சியில் தீவிரம்

புதுடெல்லி, ஏப். 29–

பார்லிமெண்ட் தேர்தலுக்கு சரியாக இன்னும் 2 ஆண்டுகள் இருக்கிறது. இந்நிலையில் அடிமட்டத்தில் கட்சியை வேரூன்றச் செய்யவும் பார்லிமெண்ட் தேர்தலில் அமோக வெற்றி பெறும் விதத்தில் கட்சியை வலுப்படுத்தவும் நோக்கமாகக் கொண்டு பாரதீய ஜனதா கட்சி தேசீய தலைவர் அமீத் ஷா, 95 நாள் நாடு தழுவிய சுற்றுப் பயணத்தைத் துவக்கியிருக்கிறார்.

ஜம்மு விமான நிலையத்துக்கு இன்று காலை வந்திறங்கினார் அமீத் ஷா. அவரை அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

பின்னர் மாபெரும் மோட்டார் சைக்கிள் – ஸ்கூட்டர் பேரணியோடு அவர் அரசு விருந்தினர் இல்லத்துக்கு மகிழ்ச்சியோடு அழைத்துச் செல்லப்பட்டார். திரும்பிய பக்கமெல்லாம் கொடிகளும், மலர் அலங்காரங்களும், பேனர்களும் ஜம்மு நகரை அலங்கரித்தன.

கட்சித் தலைவர்கள் ராம்லால், ஜீதேந்திர சிங், அனில் விஜய் ஆகியோருடன் அவர் எம். பிக்கள், எம்.எல்.ஏக்கள், எம். சிக்கள் ஆகியோருடனும் கட்சி நிர்வாகிகளுடனும் ஆய்வு நடத்தி, உரையாற்றுகிறார். அரசு மாநாட்டு மணிமண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்குப் பின்னால் மூத்த குடிமக்களை சந்தித்து அவர் உரையாடுகிறார்.

# கல்யாண் ஜூவல்லர்ஸ் நகை விற்பனை 15% அதிகரிப்பு

சென்னை, ஏப். 29–

கல்யாண் ஜூவெல்லர்ஸ் ஷோரூம்களில் எந்த ஆண்டும் இல்லாமல் இந்த ஆண்டு அட்சய திரிதிதை விற்பனை 15% அதிகரித்துள்ளது. இது மக்களிடம் நகை சேமிப்புத்திறனை காட்டுகிறது. தொடர்ந்து புதுமை டிசைனில் சிக்கன விலையில் கல்யாண் ஜூவெல்லர்ஸ் அறிமுகம் செய்யும் என்று இதன் சேர்மன் டி.எஸ். கல்யாணராமன் தெரிவித்தார்.

தேவைக்கு ஏற்ப கூடுதல் நகை ஸ்டாக் செய்திருந்ததால் தட்டுப்பாடின்றி புதுமை டிசைன் நகைகள் அனைவரையும் கவர்ந்தது. நெக்லஸ் மற்றும் கல்பதித்த நகைகளுக்கு கிராக்கி இருந்தது.

இந்த கிராக்கியை கல்யாண் ஜூவல்லர்ஸ் தொடர்ந்து கண்காணிக்கிறது. நகைகளை மக்களுக்கு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*சிறந்த நாடாளுமன்றவாதி*

# நாவலர் நெடுஞ்செழியனின் சகோதரர் இரா.செழியன் 95–வது பிறந்தநாள் விழா: விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் நடத்தினார்

சென்னை, ஏப்.29–

சிறந்த நாடாளுமன்றவாதியும், நாவலர் நெடுஞ்செழியனின் சகோதரருமான இரா.செழியனின் 95–வது பிறந்தநாளை விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் கோலாகலமாக கொண்டாடினார்.

இரா.செழியனுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் க.திருநாவுக்கரசர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா உள்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் நேரில் வாழ்த்துக் கூறினர்.

விழா நுங்கம்பாக்கத்திலுள்ள பாம்குரோவ் ஓட்டலில் நடைபெற்றது. விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமை வகித்தார்.



இந்தியாவில் ஆரோக்கியமான அரசியலை முன்னெடுத்ததில் இரா. செழியன் முதன்மையானவர் என்றும், சிறந்த நாடாளுமன்றவாதி என்றும் தலைவர்கள் அவரைப் பாராட்டினர்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன், திமுக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய குடியரசு கட்சித் தலைவர் செ.கு.தமிழரசன் உள்பட பலர் நேரில் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

# அமெரிக்க அதிபர் வசிக்கும் வெள்ளை மாளிகையை தகர்ப்போம் : வடகொரியா மிரட்டல்

வாஷிங்டன்,மே.29–

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான மாதிரி வீடியோவை வடகொரியா வெளியிட்டுள்ளது. இது, இரு நாடுகளுக்கிடையிலான பதட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

தென்கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து தங்கள் நாட்டின்மீது போர் தொடுக்க ஆயத்தமாகி வருவதாக குற்றம்சாட்டி வரும் வடகொரியா, அமெரிக்காவை அழித்து விடுவோம் என்றும் மிரட்டியுள்ளது. வட கொரியாவின் இந்த மோதல் போக்கு பெரும் சேதத்தில் போய் முடியும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் வடகொரியா, மாதிரி வீடியோ ஒன்றை தற்போது வெளியிட்டுள்ளது.

வடகொரிய இணையதளத்தில் வெளியான அந்த வீடியோவில், அண்மையில் கொரிய தீபகற்பத்திற்கு அமெரிக்கா அனுப்பிய யுஎஸ்எஸ் மிச்சிகன் நீர்மூழ்கி கப்பல் மீது தாக்குதல் நடத்துவது போன்றும், அமெரிக்காவின் வெள்ளை மாளிகை மீது தாக்குதல் நடத்துவது போன்றும், இதனால் வெள்ளை மாளிகை வெடித்துச் சிதறுவது போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை நிமிடங்கள் ஓடும் இந்த வீடியோவில் சில அனிமேஷன்களும் மற்றும் கடந்த பிப்ரவரி மாதம் வடகொரியா மேற்கொண்ட ஏவுகணை சோதனை தொடர்பான காட்சிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. வடகொரியாவின் இந்த மிரட்டல் வீடியோ, இரு நாடுகளுக்கிடையிலான பதட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

## இன்றைய மார்க்கெட்



**தங்கம் விலை**

1 கிராம் – ரூ. 2,791.00

8 கிராம் – ரூ. 22,328.00

**வெள்ளி விலை**

1 கிராம் – ரூ.42.80

1 கிலோ – ரூ.42,800





**உணவு தானிய விலை**

| | |
|---|---|
| துவரம் பருப்பு | – 108.00 |
| உளுந்தம் பருப்பு | – 120.00 |
| பாசிப் பருப்பு | – 99.00 |
| கடலைப் பருப்பு | – 99.00 |
| சர்க்கரை | – 42.00 |
| கோதுமை | – 26.00 |
| மைதா | – 26.00 |
| ரவை | – 32.00 |



**காய்கறி விலை (கிலோ ரூபாயில்)**

| | சென்னை | கோவை | மதுரை |
|---|---|---|---|
| தக்காளி | 06–08 | 12 | 10 |
| உருளைக்கிழங்கு | 10–13 | 17 | 18 |
| வெங்காயம் | 10–14 | 09 | 12 |
| கத்தரிக்காய் | 15–25 | 25 | 35 |
| முட்டைக்கோஸ் | 09–11 | 18 | 20 |
| பீன்ஸ் | 80–90 | 85 | 80 |
| கேரட் | 40–80 | 60 | 60 |
| முள்ளங்கி | 18–26 | 25 | 35 |
| வெண்டைக்காய் | 10–15 | 16 | 20 |
| முருங்கைக்காய் | 16–20 | 30 | 27 |
| பீட்ரூட் | 22–32 | 36 | 36 |
| பாகற்காய் | 25–30 | 44 | 40 |
| புடலங்காய் | 18–25 | 28 | 35 |
| குடமிளகாய் | 20–25 | 38 | 35 |
| பச்சை மிளகாய் | 22–27 | 20 | 52 |
| சாம்பார் வெங்காயம் | 40–65 | 60 | 70 |
| வாழைக்காய் | 10–35 | 22 | 25 |

**எண்ணெய் விலை (1 கிலோ)**

| | |
|---|---|
| கடலை எண்ணை | – ரூ.106.00 |
| நல்லெண்ணை | – ரூ.194.00 |
| விளக்கு எண்ணை | – ரூ.97.00 |
| தேங்காய் எண்ணை | – ரூ.330.00 |
| வனஸ்பதி | – ரூ.90.00 |


**ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 7வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031.

போன்: +91 44 4564 4000, பேக்ஸ்: +91 44 4564 4022

கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், சி-32, ஜி-பிளாக், பாந்திரா-குர்லா காம்ப்ளெக்ஸ், பாந்திரா – கிழக்கு, மும்பை-400 051. போன்: +91 22 4222 2000, பேக்ஸ்: +91 22 2654 0354

CIN: L65110TN2014PLC097792

Email:bank.info@idfcbank.com Website www.idfcbank.com

மற்றும்

**ஐடிபிஐ டிரஸ்டிஷிப் சர்வீசஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: ஏஷியன் பில்டிங், தரை தளம், 17, ஆர். காமனி மார்க், பல்லார்ட் எஸ்டேட், மும்பை400 001. போன்: 022 4080 7000

CIN: U65991MH2001G01131154, Email: itsl@idbitrustee.com, website: www.idbitrustee.com

**அறிவிப்பு**

(i) செப்டம்பர் 23, 2010, ஜனவரி 4, 2011 மற்றும் பிப்ரவரி 21, 2011 தேதியிட்ட வெளியீட்டில் ("பொது வெளியீடு 2010–11") மற்றும் (ii) நவம்பர் 11, 2011, ஜனவரி 3, 2012 மற்றும் மார்ச் 12, 2012 ("பொது வெளியீடு 2011–12")ன் கீழ் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டினால் பொதுமக்களுக்கு ரூ.1757.75 கோடி தொகைக்கு வெளியிடப்பட்ட ஈடுபெற்ற மாற்றமுடியாத மீட்கக்கூடிய டிபெஞ்சர்கள், பாண்ட்ஸ் வடிவிலானதை ('பாண்ட்ஸ்' என்று சொல்லக்கூடியது) வைத்துள்ளவர்களுக்கு, அக்டோபர் 1, 2015 அன்று ஐடிஎப்சி லிமிடெட் மற்றும் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட் மற்றும் அதன் பங்குதாரர்களுக்கு இடையே ஏற்பட்ட திட்டப்படி, கம்பெனிகள் சட்டம் 1956 பிரிவு 391 முதல் 394 வரையின் கீழ் மேற்சொன்ன பத்திரங்கள் தற்போது ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. (டீமெர்சர் திட்டம்)

அதனதன் வெளியீட்டில் குறிப்பிட்டுள்ள கூப்பன் ரேட்ஸ் தொடர்புடைய பொது வெளியீடு 2010–11 மற்றும் பொது வெளியீடு 2011–12 நிபந்தனைகளை கம்பெனி சரியான முறையில் கடை பிடித்துள்ளது. பொது வெளியீடு 2010–11 மற்றும் பொது வெளியீடு 2011–12 வெளியீட்டின் கீழ் கடன் பத்திரம் வைத்துள்ளவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த வருடாந்திர அடிப்படையில் வட்டி வழங்கல் அடிப்படையில் மார்ச் 31, 2017 அன்று வரை பாக்கி வட்டி அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மார்ச் 31, 2017 அன்று எந்தவித மீட்பு தொகையும் திருப்பிக் கொடுக்க வேண்டியது/திரும்பி வாங்க வேண்டியது ஏதுமில்லை. மேற்சொன்ன காலத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து புகார்களும் சரியான முறையில் தீர்க்கப்பட்டுள்ளன.

கம்பெனியினால் வெளியிடப்பட்ட டிபெஞ்சர்களுக்கு நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்ட நிலை பற்றி டிபெஞ்சர்தாரர்களுக்கு தெரிவிப்பதற்காக செபி (டிபெஞ்சர் டிரஸ்டிஸ்) விதிகள் 1993, விதி 15 (1) (n)ன்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இதில் டிபெஞ்சர்தாரர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின், அது குறித்து திரு. மஹேந்திரா N. ஷா, வங்கியின் கம்பெனி செயலாளர், கார்ப்பரேட் அலுவலகம்: 6வது தளம், நாமன் சேம்பர்ஸ், C–32, G–பிளாக், பந்த்ரா–குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051 அவர்களுக்கு எழுதி தெரிவிக்கலாம்.

**ஐடிஎப்சி பேங்க் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்**

மஹேந்திரா என். ஷா,
கம்பெனி செயலாளர்

**ஐடிபிஐ டிரஸ்டிஷிப் சர்வீசஸ் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்**/–

தேதி: ஏப்ரல் 27, 2017

இடம்: மும்பை — அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.

CIN: L92490TN1983PLC009903

வெப்சைட்: www.eihassociatedhotels.in

Phone: 91–44–22344747

Fax: 91–44–22346699

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 மார்ச், 2017ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து பதிவு செய்யவும், இறுதி டிவிடெண்ட் ஏதேனும் இருப்பின் அதனை பரிந்துரைக்கவும் கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 29 மே, 2017 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
**இந்த்ராணி ரே**
கம்பெனி செயலாளர்

தேதி: 28 ஏப்ரல் 2017



***சார்பு நீதிமன்றம் தாம்பரம்***
***அசல் வழக்கு எண். 119 /2015***

L. சாந்தி, ...வாதி

–எதிர்–

L.வெங்கடேசன் மற்றும் பலர் ...பிரதிவாதிகள்

7ம் பிரதிவாதி –நித்யாநந்தம், எண்.50/5, முனுசாமி சந்து, ஏகவள்ளி தெரு, திருவெற்றியூர், சென்னை–600019.

7ம் பிரதிவாதி – நித்யாநந்தத்திற்கு கொடுக்கும் அறிவிப்பு

மேற்படி அவர் வழக்கில், வாதி தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்த்து தங்களுக்கு எதிராக தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.119/2015ல் தவா தாக்கல் செய்து, மேற்படி வழக்கு வருகிற 02.06.2017ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் 7ம் பிரதிவாதி – நித்யாநந்தம் ஆகிய தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபணை இருப்பின் தெரிவிக்கவும் அப்படி அல்லாத பட்சம் தவா ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்டும் என இந்த அறிவிப்பு மூலம் அறியவும்.

**ஜா. பொன்னி B.E.,B.L(HoNS)**
வாதியின் வழக்கறிஞர்



Birla Sun Life Insurance

**அறிவிப்பு**

பிர்லா சன் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் **சென்னை - பாரிஸ் கோர்னர் கிளை** 30/06/2017 முதல் தனது இருப்பிடத்தை புதிய முகவரிக்கு மாற்றுகிறது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறது.

| பழைய முகவரி | புதிய முகவரி |
|---|---|
| **பிர்லா சன் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி** 1 வது மாடி, தாஸ் இந்தியா டவர், எண்-3, செகண்ட் லைன் பீச், சென்னை, தமிழ்நாடு - 600024, | **பிர்லா சன் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி** பிரிவு எண் 31-32, முதல் மாடி, காமராஜர் காலனி, 3வது தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600024, தமிழ்நாடு |

இடம்: சென்னை
தேதி: 29/04/2017

கையொப்பம்
கையொப்பமிட அங்கீகாரம் பெற்றவர்

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**
**பிர்லா சன் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**
**பதிவு அலுவலகம்:** ஒன் இந்தியாபுல்ஸ் சென்டர், டவர் 1, 15 மற்றும் 16வது மாடி, ஜுபிடர் மில் காம்பவுண்டு, 841, சேனாபதி பாபட் சாலை, எல்ஃபின்ஸ்டன் சாலை, மும்பை - 400 013.
Call Toll-free: 1-800-270-7000
இணையதளம்: www.birlasunlife.com
பதிவு எண். 109.

Corporate Identity Number: U99999MH2000PLC128110 ADV-B/4/17-18/109



IDFC
IDFC LIMITED

**ஐடிஎப்சி லிமிடெட்**

CIN: L65191TN1997PLC037415 email: info@idfc.com, Website: www.idfc.com

பதிவு அலுவலகம்: கேஆர்எம் டவர், 8வது தளம், எண். 1, ஹாரிங்டன் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை-600 031. தொலைபேசி எண்: + 91 44 4564 4000. பேக்ஸ்: + 91 44 4564 4022

கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C-32, G-பிளாக், பந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா(E), மும்பை-400 051. தொலைபேசி எண்: + 91 22 4222 2000 பேக்ஸ்: + 91 22 2654 0354

**மார்ச், 2017–ல் முடிந்த காலாண்டு மற்றும் முடிந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

| வ. எண் | விவரங்கள் | 31.03.2017ல் முடிந்த காலாண்டு (தணிக்கையானது) | 31.03.2017ல் முடிந்த ஆண்டு (தணிக்கையானது) | 31.03.2016ல் முடிந்த காலாண்டு (தணிக்கையானது) | 31.03.2016ல் முடிந்த ஆண்டு (தணிக்கையானது) |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 257690 | 1045818 | 208583 | 894228 |
| 2. | வரி, விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் நிகர லாபம் | 33719 | 179146 | 31524 | 167940 |
| 3. | வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | 33719 | 179146 | 31524 | (95932) |
| 4. | வரி, விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்) | 13480 | 69908 | 13045 | (93480) |
| 5. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–) | 159594 | 159594 | 159402 | 159402 |
| 6. | மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வுகள் கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் குறிப்பிட்டுள்ளபடி | 850897 31.03.2016 அன்று | | | |
| 7. | காலத்திற்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–) (தொடரும் மற்றும் தொடராத செயல்பாடுகள்) – வருடாந்திரம் அல்ல – அடிப்படை (ரூ.) – பலமிழந்தது (ரூ.) | 0.84 0.84 | 4.38 4.38 | 0.81 0.81 | (5.87) (5.87) |

குறிப்புகள்:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆண்டு நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் கம்பெனியின் இணைய தளம் (www.idfc.com) மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் (www.nseindia.com மற்றும் www.bseindia.com)ல் கிடைக்கும்.
2. என்பிஎப்சிக்கு இந்தியன் கணக்கு நிலைகள் (இண்ட்ஏஎஸ்) இன்னும் பொருந்தவில்லை என்பதால் மொத்த விரிவான வருமானம் மற்றும் இதர விரிவான வருமானம் ஆகியவை தொடர்பான விவரம் அளிக்கப்படவில்லை.
3. இதன்படி டிசம்பர் 31, 2016ல் முடிந்த காலாண்டில், இந்நிர்வாகம் 100 சதவீத சமபங்குகளை கிராம விடியல் மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திடம் வாங்கி உள்ளது. (அக்டோபர் 13, 2016 முதல் அந்த வங்கியின் பெயரை ஐடிஎப்சி பாரத் லிமிடெட் என்று அழைக்கப்படுகிறது).
4. நடந்து முடிந்த மார்ச் 31 2017 காலாண்டில், ஐடிஎப்சி லிமிடெட்டின் துணை நிறுவனமான ஐடிஎப்சி பினான்ஸியல் ஹோல்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் 25 சதவீத மூலதனத்தை கூடுதலாக ஐடிஎப்சி அசெட் மெனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட் கம்பெனியிடம் இருந்து வாங்கி உள்ளது. இதனால் ஐடிஎப்சி அசெட் மெனேஜ்மெண்ட் கம்பெனி மற்றும் நாட்டிக்ஸ் குளோபல் மெனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட் ஆகிய இரண்டு கம்பெனியும் தங்களது குரூப் கம்பெனியின் முழு துணை நிறுவனமாக எடுத்துக் கொண்டுள்ளது.
5. குழும அளவில் ஒட்டு மொத்த சீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதின் ஒரு பகுதியாக ஐடிஎப்பிசி திட்டங்கள் அதன் முழு சொந்த துணை நிறுவனமான ஐடிஎப்பிசி பைனான்ஸ் லிமிடெட்டில் இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பை நடைமுறைப்படுத்திய தேதி ஏப்ரல் 1, 2016, இது நவம்பர் 18, 2016 தேதியிட்ட ஆணையின்படி மாண்பை பம்பாய் உயர்நீதிமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
6. கம்பெனிகள் சட்டம் 1956, பிரிவு 391–394ன் கீழ், கம்பெனி மற்றும் ஐடிஎப்சி பேங்க் லிமிடெட் மற்றும் அதன் பங்குதாரர்கள், கடன் அளித்தவர்கள் ஆகியோரிடையே ஏற்பட்ட ஒப்பந்த திட்டத்துக்கு ஜூன் 25, 2015 தேதியிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒப்புதல் ஆணைப்படி மற்றும் வங்கி செயல்பாடுகளை தொடங்க ஐசிஎப்சி பாங்க் லிமிடெட்டினால் பெறப்பட்ட இறுதி வங்கி உரிமத்தின்படி, அக்டோபர் 1, 2015 முதல் நிதி நிறுவனத்தின் டீமெர்ஜர் பதிவு செய்யப்பட்டது.
7. நடந்து முடிந்த மார்ச் 31, 2017 முடிவடைந்த நிதியாண்டிற்கு ஐடிஎப்சி லிமிடெட் நிறுவனத்தின் இயக்குனர் குழு ஒரு பங்குக்கு ரூ.0.25 (2.50%) வீதம் டிவிடெண்ட் வழங்க, நடைபெறவிருக்கும் பேரவைக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு பின் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. (சென்ற ஆண்டு டிவிடெண்ட் எதுவும் வழங்கப்படவில்லை).
   மத்திய கார்ப்பரேட் துறை அமைச்சகத்தின் புதிய அக்கவுண்டிங் ஸ்டேன்டர்டு) 4ன் படி (AS4), இருப்புநிலை கணக்குகள் முடிந்த பின் ஏதாவது கண்டிஜன்சிஸ் மற்றும் நிகழ்ச்சி ஏற்பட்டால் அப்போது கம்பெனிகள் (அக்கவுண்டிங் ஸ்டேன்டர்டு) அமன்மெண்ட் விதி 2016, மார்ச் 30 2016 ன் படி, மார்ச் 31, 2017 முடிந்த ஆண்டிற்கான காலத்தில் ரூபாய் 3,990 லட்சம் டிவிடெண்ட் வழங்கும் வரி உட்பட கம்பெனியின் பொறுப்புகளாக வரையறுக்கப்படவில்லை.

ஐடிஎப்சி லிமிடெட் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
விக்ரம் லிமயே
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி

தேதி : ஏப்ரல் 28, 2017
இடம் : மும்பை